கண் வைத்திய
நிபுணர்களினால்
சிபார்சு செய்யும் கண்ணாடி
களைச் சரியாகக்
கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED
580. HOSPITAL ROAD,
NEAR BANK OF CEYLON
JAFFNA.

சுடர் 5: பிரமோதூத ஆடு வைகாசி மீ 24 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 13 (07 : 06 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 106

★ வடக்கு - கிழக்கு

# மாகாணசபைத் தேர்தலை

# உடனே நடத்த சட்டமூலம்

## அமைச்சரவை அங்கீகரித்தது

கொழும்பு, ஜூன் 7

வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்குவசதியாக சட்டமூலம் ஒன்றை உடனடியாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவது என நேற்றுக் கூடிய அமைச்சரவை முடிவு செய்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சரும் துணை பாதுகாப்பு அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா இத்தகவலை வெளியிட்டார்.

வடக்கு- கிழக்கு மாகாண சபை செயல் இழந்திருப்பதால் ஏற்பட்டுள்ள வெற்று நிலை பற்றி அமைச்சரவை விரிவாக ஆராய்ந்ததாகவும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார்.

அரசாங்கம் கொண்டுவர இருக்கும் புதிய சட்டம் வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கென மட்டுமே கொண்டுவரப்படும்.

புதிய சட்டம் மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு நிரந்தரமாக வழங்குமா என்று கேட்டதற்கே அமைச்சர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

உத்தேச சட்டம், குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மட்டுமே வகைசெய்யும் என்று அவர் சொன்னார்.

இது தொடர்பான சட்ட

[5ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

07- 6 - 90
வியாழக்கிழமை வைகாசி 24
சுபநேரம்!
07.22 - 08 52
இராகுகாலம்
01.22 - 2.52

## பாடசாலை வேலை நேரம் ஒரு மணித்தியாலம் கூடும்

### ஆசிரியருக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, ஜூன் 7

பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்க வசதியாக பாடசாலை வேலை நேரம்ஒரு மணித்தியாலத்தால் நீடிக்கப்படும்.

இதற்கான அறிவிப்பு விரைவில் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும்.

இந்த மூன்று பாடங்களிலும் போதனை நடத்தும் ஆசிரியர்களுக்கு மேலதிகக் கொடுப்படுனவு வழங்கப்படும்.

பாடசாலை அபிவிருத்தி சங்க பிரஸ்தாப ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும். இதற்கான சட்டரீதியான அங்கீகாரத்தை விரைவில் கல்வி அமைச்சு அறிவிக்க இருக்கிறது

இதே வேளை, தனியார் கல்வி நிலையங்களுக்கான புதிய திட்டம் ஒன்று அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்கு வருகிறது.

இதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு தற் சமயம் தயாரித்து வருவதாகத் தெரிகிறது. (ஒ-2,3)

கொலையுண்ட பத்திரிகையாளர்

## சொய்ஸாவின் தாயாருக்கு கொலைப் பயமுறுத்தல்!

கொழும்பு. ஜூன் 7

கொல்லப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சர்டி சொய்ஸாவின் தாயார் டாக்டர் மனோராணி சரவணமுத்துவும் அவரது வழக்கறிஞர் பட்டி வீரக்கூனும் தங்கள் உயிருக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

டாக்டர் மனோராணி சரவணமுத்து அண்மையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சத்தியக்கடதாசி ஒன்றில், சம்பவதினம் ரிச்சர்ட்டி சொய்ஸாவைக் கூட்டிச் சென்றவர்களில் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ரொணி குணசிங்காவும் இருந்தார் என்று குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து, நீதிவான், தீ. குணசிங்காவை ஆஜர் செய்யும்படி பொலீ

[5ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தலை கண்காணிக்க சர்வதேசக் குழு வரும்

கொழும்பு, ஜூன் 7

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிக்க சுயேச்சையான சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்று அழைக்கப்படலாம்.

இது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார். (அ)

# தென்பகுதிக் காடுகளில் தேடுதல்; படையினர் - தீவிரவாதிகள் மோதல்

### ஒரே நாளில் 60 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 7

எம்பிலிப்பிட்டி, பொலநறுவைக் காட்டுப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரும் தீவிரவாதிகளும் மோதிக் கொண்டனர்.

அப்பகுதிகளில் பெரிய அளவில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 6 அதிதீவிரவாதிகள் உட்பட தீவிரவாத இயக்க உறுப்பினர்கள் 60 பேர் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் கொலை, கொள்ளை தீ வைப்பு வீடு உடைப்பு உட்பட மற்றும் பல நாசகார வேலைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆறு அதிதீவிரவாதிகளைப் படையினர் மடக்கிப் பிடித்ததாகக் கூறப்பட்டது.

எம்பிலிப்பிட்டி ஆராய்ச்சிக்கந்த காட்டில் வைத்து 23பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலநறுவையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சமரை அடுத்து அப்பகுதியிலிருந்து 42 பேர் கைது செய்யப்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல் பொருள்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 7

கச்சதீவு கடற்பகுதியில் வைத்து இரண்டு படகுகளில் கொண்டுவரப்பட்ட கடத்தல் பொருள்கள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப் பட்டன.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 89 சாக்குகளில் வெங்காயம், 20 பொதிகளில் எவர்சில்வர் பொருள்கள், 15 பொதிகள் சாரம் மற்றும் அலங்காரப் பொருள்கள் இவற்றுள் அடங்கும்.

காங்கேசன்துறை சுங்கப் பகுதியில் இடம்பெற்ற விசாரணையின் பின் பொருள்களும், இழுவைப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தல் தொடர்பாக கைதான ஐவர் தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். (இ-9)

10 லட்சம் ரூபா பெறுமதியான

## காஞ்சிபுரம் சேலைகள் வடபகுதிக் கடலில் மீட்பு

படகு ஒன்றில் பத்துலட்சம் ரூபா பெறுமதியான இந்திய சேலைகளைக் கடத்தி வந்த மூவர் நேற்று வடபகுதிக் கடலில் (பாக்குநீரிணையில்) வைத்துக கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் கடற்படைத் தலைமையகத்துக்கு கிடைத்த தகவல்கள் இதனைத் தெரிவித்தன,

பிடிபட்ட சேலைகளில் பெரும்பகுதி காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான மூவரும் இலங்கைத் தமிழர் என்றும் தெரிய வந்தது. (உ-2)

ரூ.12கோடி 90லட்சம் மின் நிலுவை:

## உள்ளூராட்சிச் சபைகள் செலுத்தியே ஆகவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மின்சாரசபைக்குச் செலுத்த வேண்டிய 12 கோடி 90 லட்சம் ரூபா நிலுவைப் பணத்துக்குச் சலுகை தரமுடியாது என மின்சக்தி எரிபொருள் அமைச்சுச் செயலாளர் மறுத்துவிட்டார். இனி புனர்வாழ்வு அமைச்சு ஊடாகவே இதற்குப் பரிகாரம் தேட வேண்டியுள்ளது.

இப்படித்தெரிவித்தார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா.

மின்சாரநிலுவை சம்பந்தமாக அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகால பிரச்சினைகளாலும் சட்டவிரோத மின்சார பாவனையாலும் உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கை மின்சாரசபைக்கு 12 கோடி 90 லட்சம் ரூபாவைச் செலுத்தவேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக

(5 ஆம் பக்கம் பார்க்க]

ஈழப் போராளிகள் நுழைவதை தடுக்க

## தமிழக கடற்பகுதியில் கடும் பாதுகாப்பு ஏற்பாடு

### மாநில அரசின் சிபார்சு ஏற்பு

சென்னை ஜூன் 7

இலங்கையிலிருந்து போரளிகள் இந்தியாவுக்குள் தக்க அனுமதியின்றி நுழைவதைத் தடுக்கும் விதத்தில் கடற்பகுதியில் ரோந்துப் பணி அதிகரிக்கப்படும்.

இதற்கான வேண்டுகோளை தமிழக அரசு மத்திய அரசுக்கு விடுத்திருந்தது.

தமிழக அரசின் இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழக உள்துறைச் செயலாளர் திரு. நாகராஜன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இதனிடையில் ஏ.கே 47 ரக துப்பாக்கிகள் உட்பட மிகவும் நவீன ஆயுதங்களைக் கையாள்வதில் தமிழகப்பொலீஸாருக்கு பயிற்சி அளிக்க மத்திய அரசு பயிற்சியாளர் குழு ஒன்றை தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே ஐந்நூறு பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-எ)

## பஸ் சேவை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடபிராந்திய போக்குவரத்துசபையின் காரைநகர் சாலை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான காலைநேர பஸ் சேவையை இடைநிறுத்தி வைத்துள்ளது. [ஒ-9]

யாழ். பல்கலைக்கழக

## கம்பியூட்டர் துறைக்கு பிரிட்டிஷ் நிபுணத்துவம்

யாழ். பல்கலைக் கழகத்தில் சம்பியூட்டர் துறையை ஆரம்பிப்பதற்கான சகல நிபுணத்துவ உதவிகளையும் வழங்க பிரிட்டிஷ் நிபுணர்கள் உறுதியளித்துள்ளனர்.

நேற்று யாழ். பல்கலைக் கழகத்துக்கு விஜயம்செய்த பிரிட்டிஷ் பல்கலைக் கழக கம்பியூட்டர் துறை நிபுணர்களே இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளனர்.

பிரிட்டிஷ் தென் மேற்கு பிராந்திய சம்பியூட்டர்தொகுதிகளின் இயக்குநர் பேராசிரியர் ஜோன் சிலேற்றர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜொனாதன்டாபி ஆகியோரும், பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த ஜோன் பெயின் ஆகியோரே இங்கு வந்துள்ளனர்.

அவர்கள் பல்கலைக்கழகத்தில்பேராசிரியர்களுடன்பேச்சு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப 1970 க்கு முந்திஇருந்தது போலை இனியும்காஞ்சிபுரம் சேலையள் மெத்த மலியும் எண்டு சொல்லுங்கோ.!

கல்வித் திணைக்கள

## அதிகாரிகள், அதிபர்கள் புலிகளுடன் சந்திப்பு

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள், யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் 10ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலையின் பிரச்சினைகளும், எதிர்கால நடவடிக்கைகளும் என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறும். (இ-7)

## கசிப்பு வடித்தலை ஊக்குவியுங்கள்

### இப்படிக் கேட்கிறார் வாசு!

கொழும்பு, ஜூன் 7

கசிப்பு வடிக்கும் தொழிலை ஊக்குவிக்குமாறு லங்கா சமசமாஜக் கட்சி எம். பியான திரு. வாசுதேவ நாணயக்கார நேற்றுநாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்

மொத்த விற்பனவு வரியுடன் தொடர்புடைய சட்டமூலம் ஒன்றின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு அவர் உரையாற்றினார். தமது உரையில் அவர் கூறியதாவது:-

கடந்த காலங்களில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு பயங்கரவாதமே காரணம் என்று அரசாங்கம் சமாதானம் கூறி வந்தது. இப்போது பயங்கரவாதத்தை அடக்கி விட்டோம்என்கிறார்கள். ஆனால்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கசிப்பு வடிப்பதற்கு அனுமதிப் பத்திரம்!

### அரசு பரிசீலனை

கொழும்பு, ஜூன் 7

கசிப்பு வடிக்கும் தொழிலை செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது!

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

கசிப்பு வடிக்கும் தொழிலில் ஈடுபடுவோருக்கு "லைசென்ஸ்" வழங்குவதற்கு வசதியாக கலால் கட்டளைகள் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரவும் அரசு யோசித்து வருவதாக அவர் மேலும் சொன்னார். (உ-2)

# அபிவிருத்தி வேலைக்கு காலக்கெடு; காலம் பிந்தினால் நிதி கைமாறும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ் - மாவட்டத்துக்கென கடந்த வருடத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் அந்தந்தத் திணைக்களங்களினால் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிவடைய வேண்டும். இல்லையேல் அந்த நிதி வேறு திணைக்கள அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும்.

யாழ்- செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது

யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய (Gestetner Copier 2216 Z) பாவிக்கப் படாத போட்டோஸ்ரற் மெசின் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு இ. கண பதிப்பிள்ளை, 153/1, ஆடியபாதம் வீதி, யாழ். மருத்துவபீடம் முன்பாக, கொக்குவில் கிழக்கு. (3768)

ஒல்லாந்திலிருந்து இறக்கு மதி செய்த (Crimsonglobe) பிற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறாம் டின் ரூ 150 00 தேவைக்கு: பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

### காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கில் இறால் மடத்திற்கு அண்மை யில் 32 பரப்புக் காணி பகுதி யாக அல்லது முழுதுமாக விற்பனைக்குண்டு. விபரங் களுக்கு பொ. அருணாசலம் மாஸ்டர், தஞ்சிட்டி, அள வெட்டி, அல்லது ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணம். (3769)

### தேவை

தேனீர் சாலையில் றொட்டி அப்பம், தோசை போடவும் சமையல்கள் செய்யவும், தேனீர் போடவும் ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: புதிய நம்–130 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (13348)

### மணமகன் தேவை

இந்து, வேளாள, 28 வய துடைய கொழும்பில் பொறி யியலாளராகக் கடமைபுரியும் அழகிய பெண்ணிற்கு மண மகன் தேவை. பொறியிய லாளரை விடக் குறைந்த தகுதியுடையவர்களும் விண் ணப்பிக்கலாம். சீதனம் வழங் கப்படும். இல. 719, C/o உதயன். (3760)

### மணமகன் தேவை

யாழ் இந்து கோவிய குல தனியார் நிறுவனமொன்றில் உதவிக் கணக்காளராகப் பணி புரியும் 28 வயதுடைய 5' 4'' உயரமுள்ள மணமக ளுக்கு அரசாங்க அல்லது தனி யார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அதே குல அல்லது உயர் குல மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சீதனம் வழங்கப்படும். இல: 720, C/o உதயன். (3764)

### திருமண அழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும திரு மணக்காட்டுகள் சகலடிசைன் களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்-புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Shabra – Samy & Co அருகாமையில்] (C/4644)

### துர்க்கா திருமண சேவை

எல்லா சாதி, சமயங்களி லும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம் புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளும் நாள் ஞாயிற்றுக்கிழமை முகவரி துர்க்கா திருமண சேவை வளர்மதி இல்லம், கே கே எஸ். றோட், மல்லாகம். (3734)

### போட்டோஸ்ரட்

உங்கள் தேவைக்கேற்ப சிறியதை பெரிதாக்கியும் பெரியதை சிறிதாக்கியும் கொடுப்பதில் தரமான பிரதி களை வேண்டிய அளவுகளில் ஒரு நிமிடத்தில் செய்து கொள்ள நாடுங்கள் பிக் பென்ஸ் "B", கண்டிவீதி, கிளிநொச்சி சிங்கர் கொம் பனி முன்பாக. (13184)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு V. K. M. FARM

தரமான புறொயிலர்ஸ் மொத்தமாகவும் சில்லறை யாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில் லறை விலை 65/- No:- 12, கனகசபை லேன், (யாழ் இந் துக்கல்லூரி பின் ஒழுங்கை) யாழ்ப்பாணம். (13346)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய Gas குக்கரில் பிழையா? இல்லையெனில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவா யினும் மிகத் திறமையான முறையில் குறித்த தவணை யில் திருத்திக் கொடுக்கப் படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D. முஸ தபா, யுப்ளிபஸார், 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம். [3765]

### டியுஷன் வகுப்புகள்

சிறு பிள்ளைகளுக்கு தனிப் பட்ட டியுஷன் வசதிகள் உண்டு. ஆங்கிலம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் Nursery தொடக்கம் ஆறாம் வகுப்பு வரை கற்றுக் கொடுக் கப்படும். English Diploma Holder விபரங்களுக்கு: Miss Kosalai Sinnaththampoe, 7/2. Kachchery - Nallur Road, Behind Post Office, Chundikuli (3759)

# "ஷப்றா" ஆதரவுடன் வலைப்பந்தாட்டம்

## அரியாலையில் நடக்கும்

யாழ்ப்பாணம் ஜூன் 7

"ஷப்றா" யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆத ரவுடன் யாழ்ப்பாணம் அரி யாலை சனசமூக நிலையம் நடத்தும் வருடாந்த வலைப் பந்தாட்ட போட்டி இம் மாதம் நடைபெறவிருக்கி றது.

இந்தப் போட்டியில் பங்கு பெறவிருக்கும் கழகங்கள், குழுக்களிடமிருந்து தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட் டிருக்கின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது.

இதே போன்ற வலைப்பந் தாட்டப் போட்டியை "ஷப்றா ஆதரவுடன் அரி யாலை விளையாட்டுக் கழகம் கடந்த வருடமும் சிறப்பாக நடத்தியது குறிப்பிடத் தக்கதாகும். (உ)

### டொனால்ட் கிண்ணக் கிரிக்கெட்

# சென்றலைட்ஸை எதிர்த்து கிறீன் அன் கோல்ஸ் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

டொனால்ட் கிண்ணத்துக் காக சென்றலைட்ஸ் விளை யாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50ஓவர் கிரிக்கெட் போட்டியில் இன்று சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து "கிறீன் அன் கோல்ஸ்" அணி மோத விருக்கிறது.

இப்போட்டி இன்று காலை 9 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிமைதானத்தில் ஆரம் பமாகும்.

### ஜொனியன்ஸ் —சென் றலைட்ஸ்

சென்ற சனிக்கிழமை நடை பெற்ற சென்றலைட்ஸ் (புளூஸ்) அணிக்கு எதிரான போட்டியில் ஜொனியன்ஸ் அணி ஏழு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய சென்ற லைட்ஸ் அணி 32.3 ஓவர் களில் 82 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஜெயசீ லன் 16, மனோகரன் ஆட்ட மிழக்காமல் 15, உமாசங்கர் 11 ஓட்டங்களைப் பெற்றனர். சஞ்சீவன், எஸ் முரளிதரன் ஆகியோர் தலா மூன்று விக் கெட்டுக்களைக் கைப்பற்றி னர்.

ஜொனியன்ஸ் அணியினர் 12. 5 ஓவர்களில் மூன்று விக் கெட்டுகள் இழப்பிற்கு 83 ஓட் டங்களைப் பெற்றனர். மகிந்தா ஆட்டம் இழக்கா மல் 41, கணேஸ் பஞ்சன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். (மு)

### வெளியீட்டு விழா

கைதடி, ஜூன் 7

புதுவை அன்பனால் எழு தப்பட்டு நவீன முறையில் அச்சிடப்பட்ட தமிழ்த்தாய் பதிப்பகத்தின் முதலாவது பதிப்பான 'ஒரு வேள்வி நடக்கிறது' என்னும் நூலின் வெளியீட்டுவிழா இம்மாதம் புத்தூரில் நடைபெறவிருக்கி றது. (இ74)

### 17வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட்

# கனகரத்தினம் ம.ம.வி. வெற்றி

யாழ்ப்பாணம் ஜூன் 6

யாழ்ப்பாணப் பாடசாலை கள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையி லான போட்டியில யாழ். கனகரத்தினம் ம.ம. வித்தி யாலய அணி யாழ்ப்பாணக் கல்லூரி அணியை புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தா டிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 190 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பாரத் 38, கிளீவ்ராஜன் 23, வீரசுதன் 22, ஆருக்ஷன் 21 முரளீதரன் 20, மகேந்திரன் 19, பீற்றர் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன், பாஸ் கரன் இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும், ஜெயக் குமார் இரண்டு விக்கெட்டுக் களையும், தளிர் ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய கனகரத்தி னம் ம.ம.வி. அணி ஆட்ட நேர முடிவின் போது எட்டு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 261 ஓட்டங்களைப் பெற்றது. தளிர் 88 இளங்கீரன் 43. லோகி ஆட்டமிழக்காமல் 26, ரஞ்சன் 23, பிரதீபன் 21, பிரணவன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிளீவ்ராஜன் நான்கு விக் கெட்டுகளையும், பாரத் மூன்று விக்கெட்டுகளையும், வீரசுதன் ஒரு விக்கெட்டை யும் கைப்பற்றினர். (இ-மு)

### அமிர்தகழியில் பரிசளிப்பு விழா

பட்டிருப்பு ஜூன் 7

மட்டக்களப்பு – அமிர்தகழி கொத்தணிப் பாடசாலை களின் பரிசளிப்பு விழா எதிர் வரும் 11 ஆம் திகதி கருவப் பங்கேணி விபுலானந்தா வித் தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. எஸ். சாம்பசி வம் தலைமையில் நடைபெ றும்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் பிரதம அதிதி யாக விழாவில் கலந்து கொள் வார்.

சிறப்பு அதிதிகளாக உத விக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் மகாலிங்கம், பிரதம கல்வி அதிகாரிகளான திரு. எஸ் தே. சோமயானந்தம், ஜனாப் ஏ.எம் ஏ சாப்டீன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-121)

### லியோ சிரமதானம்

யாழ்ப்பாணம் ஜூன் 7

பரியோவான் கல்லூரி லியோ கழகம் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானம் செய்தது. இதில் லியோ கழக உறுப்பினர்கள் ... பேர் வரை பங்கு பற்றினர். (இ)

# இந்தியப் படை விலக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசின் போக்கில் மாற்றம்

## இந்து நாளிதழுக்கு பாலசிங்கம் பேட்டி

கொழும்பு, ஜூன் 7

நாம் முதலில் பேச்சுக்களை ஆரம்பித்த போது இலங்கை அரசு நாம் கேட்டதை எல் லாம் தந்தது. இந்திய இரா ணுவம் விலக்கிக் கொள்ளப் பட்ட பின்னர் இலங்கை அர சின் போக்கில் ஒரு மாறுதல் தெரிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் 'இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

அமைச்சர் விஜேரத்தினா ஊடாக இலங்கை அரசும் எதிர்க்கட்சிகளும், நாம் ஆயு தங்களை ஒப்படைத்தால் தான் ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய்து தேர்தல் நடத் தப்பட வேண்டும் என்று கூறி வருகின்றன.

எம்மால் ஏற்றுக்கொள்ளப் பட முடியாத கோரிக்கை இது.

நிரந்தரத்தீர்வு ஒன்றுகாணப் படும் வரை ஆயுதங்களைக் கீழே வைக்கப்போவது இல்லை என்று நாம் திரும்ப திரும்பக் கூறிவருகிறோம்.

ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்த னையை தொடர்ந்து வற்பு றுத்துவது அரசியல் முட்டுக் கட்டை ஒன்றையே உருவாக் கும்.

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் அரசியல் இடைவெளி தொடருவதை நாம் விரும்ப வில்லை.

ஆகவேதான் ஆறாவது திருத்தத்தை ரத்துச் செய் வது, மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத் துவது ஆகியவற்றை அவசர மாகச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றோம்.

இப்படி டாக்டர் அன்ரன் பாலசிங்கம் சொன்னார். (இ-எ)

### விபத்து

வல்வெட்டித்துறை, ஜூன் 7

வல்வெட்டித்துறை யாழ்ப் பாண வீதியில் மக்கள் வங் கிக் கிளைக்கு அருகாமையில் மினிவான் ஒன்றும் மோட் டார் சைக்கிள் ஒன்றும் மோதின. மோட்டார் சைக் கிள் பலத்தசேதமடைந்தது மோட்டார் சைக்கிளோட்டி தெய்வ தீனமாகச் சிறுகாயங் களுடன் தப்பினார். (இ 160)

பிரயாணம்! பிரயாணம்!! பிரயாணம்!!!

## 'M' THREE TRAVELS

வழங்கும்

## சவூதிஅரேபியா பிரயாணம்

சவூதி அரேபியா [Saudi Arabia]

| | | Vacancy | Salary |
|---|---|---|---|
| 1. | Bakery Helpers (பேக்சரி உதவியாளர்கள்) | 04 | 450 S. R |
| 2. | House Maids (வீட்டுப் பணிப்பெண்கள்) | - | - |
| 3, | Cleaners (சுத்திகரிப்பாளர்கள்) | 50 | 350 S R |

PASSPORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய தாபனம்

## 'M' THREE TRAVELS

தலைமை அலுவலகம்: "இந்திரபவனம்', சோதி வீதி, காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்: இல. 1, 2வது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4715)

## யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றிடங்கள்

1. பதவி – பொது முகாமையாளர்
   சம்பளத்திட்டம்: 2005 — 3055 ; 75 x 6 — 100 x 6
2. பதவி – பதனிடும் அதிகாரி (Finishing Master)
   சம்பளத்திட்டம்: 2005 — 3055 ; 75 x 6 — 100 x 6
3. பதவி – காசாளர் / லிகிதர்
   சம்பளத்திட்டம்: 855 — 1385 ; 30 x 7 — 40 x 8

இத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பொருத் தமான படிகளும் வழங்கப்படும்.

விபரங்களை நேரிலோ தபால் மூலமாகவோ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் போதிய முத்திரை ஒட் டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்


விண்ணப்ப முடிவுத் திகதி: 20 - 06 - 1990

அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
யாழ். மாவட்ட புடவை
நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
6/2, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4711)

## 31வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## வேலுப்பிள்ளை செல்லத்துரை
(மோட்டார் சராஜ் உரிமையாளர்)

மலர்வு 08 - 05 - 1921 உதிர்வு: 08 - 05 - 1990

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற அன்புத் தெய்வத்தின் நினைவு என்றென்றும் எம்மன தில் நிலைத்திருக்கும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

07-06-1990 ல் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை யிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.

மோட்டார் சராஜ்,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். (13350)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி பொன்னையா இலட்சுமி

மலர்வு: 12 - 10 - 1901 உதிர்வு: 08 - 05 - 1990

ஆருயிர் அன்னையே, அணையாத சோதியே
எம்மினிய தந்தையின், ஏற்றமிகு வழித்தடத்தில்
என்றுமே தப்பாமல் எம்மையெல்லாம் வழி நடத்தி
வாழ வைத்தாய் வாழ்வளித்தாய்
சீரும் சிறப்பும் திருவும், சிறக்கவைத்த மாதாவே
உன்னை மறவோம் உலகில் நாம் வாழுமட்டும்

எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காத அன்னையின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்ப துடன் 08-06-90இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறும், அன்றைய மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்பு டன் அழைக்கின்றோம்.

எங்கள் இனிய அன்னையின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டும்

அன்பான மக்கள், அருமை மருமக்கள்,
பெருமை தரும் பேரப்பிள்ளைகள்.

4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. [3814]


# FBK
## மோட்டார் வாகன பட்டறீஸ்



நம்பகமான சக்திக்கு

சகல முன்னணி பட்டறி விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஏக முகவர்கள்
மெக்வூட்ஸ் லிமிடெட்
10 ஞானார்த்த பிரதீப மாவத்தை (மருதானை வீதி)
கொழும்பு -8 தொலைபேசி 697965-9
ரெலெக்ஸ் - 21153 MACWOOD CE பெக்ஸ் - 94-1-699454
விநியோகஸ்தர்கள்
ஜெனரல் டிரேடிங் கம்பனி
52/2 (2 வது மாடி) பஞ்சிகாவத்தை வீதி கொழும்பு - 10
தொலைபேசி - 431279, 69226, 696091

IMPACT House of Advertising (Pvt) Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

**பொருள்:**
பிரிந்து செல்லாத நிலைமையாக இருந்தால் எனக்குச் சொல்; பிரிந்து சென்று விரைந்து வருதலைப் பற்றியானால் அதுவரையில் உயிர் வாழ வல்லவர்க்குச் சொல்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 2288
07 - 06 - 1990    த. பெ இலக்கம் 25

# கிணறு வெட்டப் பூதம் புறப்படாமல் பார்க்குக!

வடக்கு—கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்காக விசேட சட்டமூலம் ஒன்று கொண்டுவரப்பட உள்ளது. புதிதாகச் சட்டம் இயற்றித்தான் மாகாண சபையைக் கலைக்க முடியும் என்ற நிலை.

இப்போதுள்ள மாகாணசபைகள் சட்டத்தின் பிரகாரம், ஒரு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்தால் அல்லது சம்பந்தப்பட்ட சபையின் முதலமைச்சர் சிபார்சு செய்தால் மட்டுமே ஜனாதிபதியால் அதனைக் கலைக்க முடியும்.

இன்றைய நிலையில் வடக்கு —கிழக்கு மாகாண சபையின் நிலைமை தர்மசங்கடமான ஒன்று. அதன் பதவிக் காலம் முடியவில்லை. சபையின் முதலமைச்சரும், அமைச்சர்களும் தலைமறைவாகி விட்டனர்.

மாகாண சபையின் கூட்டங்கள் மூன்று மாதங்கள் நடக்கவில்லை, அதனால் உறுப்பினர்களின் பதவிகள் வெற்றிடங்களாகி உள்ளன. எனினும் மாகாண சபை கலைந்துவிட்டதாகக் கருதமுடியாது. தேர்தலில் வெற்றியீட்டிய கட்சிகள் புதியவர்களை காலியான உறுப்பினர் பதவிகளுக்கு விரும்பினால் புதியவர்களை நியமிக்கலாம் அப்படிப் புதியவர்களை நியமித்தாலும், சபை கூடுவதற்கான புறநிலைச் சாத்தியங்கள் இல்லை என்பது யதார்த்த நிலை; நிதர்சனமாகத் தெரிவது.

எனவே வடக்கு — கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் ஆட்சி நிர்வாக — வெறுமை நிலையைப் போக்குவதற்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு வழி செய்வதற்குச் சபையைக் கலைத்தே ஆக வேண்டும்.

சபையைக் கலைப்பதில் தர்மசங்கட நிலைமை தோன்றி உள்ளதால், புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டிய கட்டாயமும் தோன்றி உள்ளது

ஆனால் அந்தப் புதிய சட்டம் எப்படி அமையப்போகிறது என்பதுதான் கேள்வி. இப்போதுள்ள சட்டம் மாகாண சபையைக் கலைக்கும் விவகாரத்தில் மிகவும் கட்டியானது: காத்திரமானது; பாதுகாப்பானது. ஜனாதிபதி ஒருவர் தான் நினைத்தவாறு மாகாண சபையைக் கலைக்க முடியாதவாறு, உறுதியாக, மிகப் பலமாக உள்ளது.

உத்தேச புதிய சட்டத்தில் ஜனாதிபதி தான் விரும்பினால் மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் நிரந்தரமாக வழங்கப்படுமானால் பெரும் ஆபத்தாகிவிடும். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிப் போகும். தடிமன் காய்ச்சலுக்கு மருந்து வாங்கப் போனவருக்கு நஞ்சு ஊசி ஏற்றியதாக முடிந்துவிடும்.

ஒரு தற்காலிகப் பிரச்சினையை முன்வைத்து, நிரந்தரமாக உறுதியாக இருந்த பாதுகாப்பு மதிலை உடைத்துவிட அனுமதிக்கக் கூடாது. மாநில அரசுகளை கலைக்கும் ஏகபோக அதிசாரம் இந்தியாவில் ஜனாதிபதிக்கு உள்ளதால் ஏற்படும் அரசியல் சிக்கல்கள் பலவற்றைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம்.

எனவே புதிய சட்ட மூலம், மாகாணசபையை முதலமைச்சரின் சிபார்சின் பேரில் அல்லது பதவிக் காலம் முடிந்ததன் பேரில் தான் ஜனாதிபதியால் கலைக்க முடியும் என்ற விதியை மேலாண்மை அல்லது தள்ளுபடி (Supersede) செய்வதாக அமையக் கூடாது.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஏற்பட்டுள்ள தற்காலிக நெருக்கடியை தவிர்க்கும் ஒரு சிறப்பு ஏற்பாடாக, தற்காலிக, தனி ஏற்பாடாகவே புதிய சட்டம் அமைய வேண்டும். அதாவது இப்போதுள்ள மாகாண சபையைக் கலைத்த பின்னர் செயலற்றதாகிப் போகும் விதத்தில் அது உருவமைக்கப்பட வேண்டும்.

அப்படிச் செய்வதற்கு அரசு முழு விருப்பம் கொண்டுள்ளதா இல்லையா என்பது குறித்து இன்னும் கருத்து எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. இது விடயம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அலசி ஆராயப்படும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருந்தனர்.

எது எப்படியாயினும், புதிய சட்டமூலம், மாகாண சபைகளைக் கலைக்கும விடயத்தில் கட்டுப்பாடற்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்கு அல்லது அரசாங்கத்துக்கு வழங்கும் விதத்தில் அமையக் கூடாது என்ற தமது நிலைப்பாட்டை விடுலைப்புலிகள் இறுக்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும். அப்படியே உறுதியாக நிற்பார்கள் என்றும் நம்புகிறோம்.

## முல்லை. விவசாயிகளிடையே சிறுபோக செய்கைப் போட்டி

முல்லைத்தீவு ஜூன் 6

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கிடையே சிறுபோக நெற் செய்கைப் போட்டி ஒன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் நடாத்தப்படவுள்ளது.

150 புசலுக்கு மேல் விளைச்சலைப பெறுபவர்களில் முதல் மூவருக்குப் பணப் பரிசுகளும், மற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முதல் பரிசுக்கு ரூபா நாலாயிரமும் இரண்டாம் பரிசுக்கு ரூபா மூவாயிரமும் மூன்றாம் பரிசுக்கு ரூபா இரண்டாயிரமும் வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பப் படிவங்களை அவ்வப் பகுதி கமநல சேவை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 15 ஆகும்.

அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட குழு பரிசுக்கு உரியவர்களை, நெல் அறுவடை மதிப்பீட்டு அளவீடு மூலம் தெரிவு செய்யும் என முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ-118)

## கலைவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 7

யாழ். மாநகராட்சி மன்றத்தின்பௌர்ணமிக் கலை விழா இன்றுவியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பீ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மணிவிழாக் கண்ட தமிழறிஞர் திரு. சொக்கன், கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். (இ-7)

## சமய சந்நிதிகளில்

### புங்குடுதீவில்

புங்குடுதீவு, ஜூன் 7

புங்குடுதீவு மேற்கு-இராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மாலை தீர்த்தோற்சவத் திருவிழாவும், 10 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (இ-ரி)

### கந்தரோடையில்

மயிலணி ஜூன் 07

கந்தரோடையில் தேரோடும் ஒரேஒரு கோவிலான அருளானந்தப் பிள்ளையார் கோவிலின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமையும், தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (இ 89)

### வட கோவையில்

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த இரத உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிகு நடைபெறும். (இ-72)

### சுழிபுரத்தில்

சுழிபுரம், ஜூன் 7

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

பறாளை தொண்டர் சபை பக்தர்களுக்கு அன்று அன்னதானம் வழங்கும். மறுநாள் வெள்ளிக்கிழமை ழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவம்நடைபெறும்

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகமும் அன்று பிற்பகல் கந்தரனுபூதி மனனம் செய்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (இ-28)

### பொங்கலும் திருக்குளிர்ச்சியும்

தாளையடி, ஜூன் 7

பச்சிளைப்பள்ளிப் பகுதியில் பிரசித்தி பெற்ற திரியாய் அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும், திருக்குளிர்ச்சியும் நாளை வெள்ளிக் கிழமை நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை காலை வழி வெட்டுதல் நிகழ்ச்சியுடன் உற்சவம் முடிவடையும். (இ-144)

# கிளிநொச்சியில் விவசாய உபகரண தொழிற் பயிற்சி நிலையம்

## ஆஸ்திரேலிய அரசு நிதி உதவி

அம்பாறை, ஜூன் 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கிளிநொச்சியில் விவசாய உபகரண தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை விரைவில் அமைக்க இருக்கிறது.

வடக்கு, கிழக்குமாகாண இளைஞர், யுவதிகளுக்கான சுய தொழில் பயிற்சித்திட்டத்தின் கீழ் இந்த விவசாய உபகரணத் தொழிற் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கென இரண்டரைக் கோடி ரூபாவையும் வழங்க ஆஸ்திரேலியா இணக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும், பணிப்பாளர் நாயகமுமான திரு. பெனடிற் குமாரகே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்த திரு. பெனடிற் குமாரகே அங்கு வைத்து இந்தத் தகவலை வெளியிட்டார்.

மேற்படி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டதும், அங்கு இரண்டு சக்கர, நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் உட்பட விவசாய உபகரணங்கள் திருத்துதல், பராமரித்தல், உபகரண உற்பத்தி என்பன தொடர்பாகஇளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இங்கு மூன்றுமாத, ஆறு மாத காலப் பயிற்சிகள் அளிக்கப்படுமென்றும், வடக்கு, கிழக்கில்நிலவும் தற்போதைய அமைதிச் சூழ்நிலையை அனுமானித்து விரைவில் நிலையம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் திரு. குமாரகே தெரிவித்தார்.

ஏற்கனவே தம்புள்ள பகுதியில் இத்தகைய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருவதாகவும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மற்றொரு நிலையம் அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-14)

## மின் இணைப்பு துண்டிப்பு!

புதுக்குடியிருப்பு ஜூன் 7

சிவில் நிர்வாகச் சீர்குலைவைப் பயன்படுத்தி தொண்டமானாறு, உடுப்பிட்டி ஆகிய கிராமங்களில் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத மின் இணைப்புக்கள் அனைத்தும் சென்ற செவ்வாய் கிழமை இலங்கை மின்சார சபையினரால் துண்டிக்கப்பட்டன.

இந் நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பாதுகாப்பு வழங்கினர். (இ-126)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி மாநாடு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு எழுச்சி மாநாடு நடைபெறும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. கா. சோமசுந்தரத்தின் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதமவிருந்தினர்களாக கல்வி துணை அமைச்சின் இணைச்செயலாளர் திரு. வெ. சபாநாயகம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், வடக்கு – கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். சந்திரராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-7)

## வாசகர் திருமுகம்

### திருத்தப்படாத வீதிகள்

கடந்த டிசம்பர் ஜனவரி மாதங்களில் புங்குடுதீவின் பழுதடைந்த வீதிகளை செப்பனிடும் வேலைகளை பெருந்தெருக்கள் திணைக்களம் மேற் கொண்டு ஒரு சில பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளைப் புனரமைத்தது. ஆயினும் அரசினர் வைத்தியசாலைச் சந்தியில் இருந்து தபாற் கந்தோர் வரையுள்ள புங்குடுதீவின் முக்கிய இடமான சந்தையடியினூடே செல்லும் பிரதான வீதி குன்றும், குழியுமாக போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் சிதைவடைந்து காணப்படுகிறது.

இவ்வீதிச் சிதைவினால் ஏற்படும் அசௌகரியம் குறித்து பாதசாரிகளும், வாகனச் சொந்தக்காரர்களும், பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் அதிருப்தி அடைந்துள்ளார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியைத் திருத்த நடவடிக்கை எடுப்பார்களா?

கே. தவம்
புங்குடுதீவு

### மாணவிகளின் வசதி கவனிக்கப்படுமா?

இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவிகள் கல்வி கற்கும் யாழ்ப்பாணத்திலுள்ளஓர் மகளிர் கல்லூரியில் மாணவிகளின் பாவனைக்கு சொற்ப எண்ணிக்கையான மலசல கூடங்களே உள்ளன. அத்துடன் அவற்றை உபயோகிப்பதற்கு நீர், வாளி வசதிகள் நீண்ட காலமாக இல்லை. துப்பரவு இன்றிக் காணப்படும் இம் மல சல கூடங்களை மாணவிகள் உபயோகிக்க முடியாமல் உள்ளது.

காலை 8 மணிக்கு முன்பாக கல்லூரிக்கு வரும் மாணவிகள் மாலை 3. 30 மணிவரை இயற்கை உபாதைகளிலிருந்து தங்களைக் கட்டுப்படுத்த முடியுமா? எனவே சம்பந்தப்பட்டவர்கள் மாணவிகளின் வசதியை கவனத்தில் எடுப்பார்களா?

ஓர் மாணவி
யாழ்ப்பாணம்.

# கூடுதல் உறுப்பினரைக் கொண்ட சங்கத்தினால் தான் விமோசனமா?

## நிலைமை மாறுகிறது என்கிறார் சந்திரசேகரன்

தலவாக்கலை ஜூன் 7

கூடுதலான உறுப்பினரைக் கொண்ட தொழிற் சங்கம் தான் மலையக மக்களுக்கு விமோசனம் தேடித்தரும் என்ற கருத்து மலையகத்தில் இன்று மாறி வருகிறது.

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் அரசியல் போராட்டங்களுக்குமிடையிலுள்ள பேதத்தையும் மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். நான் கைதான போது தொழிற்சங்க பிரிவினைகளை மறந்து மக்கள் நடத்தியபோராட்டம் அந்த தெளிவினால் ஏற்பட்ட பிரதிபலிப்பாகும்.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்புப் பிரிவு அமைப்பாளர் கூட்டத்தில் தலைவர் பி. சந்திரசேகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னணியின் நிர்வாக செயலாளர் திரு. ஆர். என். செல்லையா வரவேற்புரையாற்றினார். திரு. சந்திரசேகரன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

அண்மைக்கால நிகழ்வுகள் காரணமாக மலையக மக்களும் இளைஞர்களும் தீவிரமாக சிந்தித்து தமது சமூக விடுதலைக்கு அரசியல் கட்சி தேவையென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் எண்ணங்களையும் செயல்களையும் ஊக்குவிப்பதற்கும் மலையக மக்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உறுதியான கொள்கைகளின் அடித்தளத்தில்உருவாக்கப்பட்டது மலையக மக்கள் முன்னணி.

கொழும்பில் குடியேறி வசித்தாலும் தனது பிறப்பிடம் மலையகம் என்பதை ஒவ்வொருவரும் மனதில் கொள்வதோடு தம் மக்களின் உயர்வுக்காக முன்னணி மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

இப்படி அவர் கூறினார். முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. பி. ஏ. காதரும் உரையாற்றினார்.

கூட்டத்தில் கொழும்பின் 15 மாவட்டங்களிலும் செயல்பட 11 அமைப்பாளர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. துணைத் தலைவர் திரு. வி டி. தர்மலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். கவி முத்துசாமி எழுச்சி கீதம் பாடினார்.

## சம்பந்தர் குருபூஜை

யாழ்ப்பாணம், ஜூன் 07

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூஜை நடைபெறும். (இ-7)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவுருவச்சிலை வீதி உலா

யாழ்ப்பாணம் ஜூன் 7

நல்லை ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்படவிருக்கும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவுருவச் சிலையின் திருவீதியுலாவை 3 தினங்கள் சிறப்பாக கொண்டாடுவதற்கு அகில இலங்கை திருமுறை மன்றத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இன்று வியாழக்கிழமை காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளின் பின் அரசடி வீதியில் உள்ள அகில இலங்கைத் திருமுறை மன்றப் பணிமனையில் இருந்து இச்சிலை கந்தர்மடம் ஆத்திசூடி வீதி விநாயகர் கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துக்குக் கொண்டு வரப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நல்லை ஆதின குரு மகா சந்நிதானத்தின் அருளாசியுடன் அங்கிருந்து புறப்பட்டு நல்லை ஸ்ரீ சட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் எழுந்தருளச் செய்யப்படும்.

9 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ சட்டநாதர் சுவாமி கோவிலில திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

இச்சிலையை ஸ்தபதி சிற்ப ஞானகேசரி சு. பாஸ்கரன் உருவாக்கியுள்ளார்.

## ஆரம்ப பாடசாலை அமைக்க அரச அதிபருக்கு மகஜர்

கைதடி ஜூன் 7

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் வாழும் சிறுவர்களின் கல்வி நலன் கருதி இப்பகுதியில் ஒரு ஆரம்ப பாடசாலையை அமைத்துத் தருமாறு இக்குடியேற்றத் திட்ட வாசிகள் யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

இப்பகுதி சிறுவர்கள் தமது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக வெகுதூரம் நடந்து செல்லவேண்டி இருக்கிறது. இதனால் அவர்களுடைய கல்வி பெருமளவு பாதிக்கப்படுகிறது. இப்பகுதியில் ஆண்டு 4 வரையில் படிக்கக் கூடிய ஒரு பாடசாலையாவது கட்டித்தரப்பட வேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-74)

## கந்தசாமி ஞாபகார்த்த விழா

யாழ்ப்பாணம் ஜூன் 7

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச்சங்கமும், மகளிர் இலக்கிய வட்டமும் இணைந்து நடத்தும் தியாகி கந்தசாமியின் 43 ஆவது ஞாபகார்த்த விழா இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டை விளாத்தித்தோட்டத்தில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. ஐ. சாந்தன் உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி. ராணி சின்னத்தம்பி, சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். (இ-7)

## மகவம் வைபவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மறைக்கல்வி நிலையத்தில இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த மகவம் கௌரவ விருது வழங்கல் வைபவம் தவிர்க்கப்பட முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக மகவம் தலைவர் திரு. வேல் அமுதன் அறிவித்துள்ளார். வெகு விரைவில் புதிய திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# வெளிநாடுகளிலுள்ள டாக்டர்கள் நாடு திரும்பும் சூழ்நிலை வேண்டும்

## பிரியா விடை வைபவத்தில் பிரெஞ்சு டாக்டர் கூற்று

மட்டக்களப்பு, ஜூன் 07

இந்தநாட்டில் இன்றைய நிலை குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன். வெளிநாடுகளில் கடமைபுரியும் தமிழ் டாக்டர்கள் தாயகம் திரும்பி தமது மக்களுக்குச் சேவையாற்றும் ஒரு சாதகமான சூழ்நிலை இங்கு உருவாக வேண்டும்என்று பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கூறினார் பிரெஞ்சு டாக்டர் ஆன். வின்சன்ட்.

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் குழந்தை வைத்திய நிபுணராகக் கடமையாற்றி தாயகம் திரும்பும் அவர் செய்[illegible] கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு [illegible]

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

யாழ்- வவுனியா' திருமலை மாவட்டங்களில் கடமையாற்றிய பிரெஞ்சு டாக்டர்களுக்கு, நிர்வாக மட்டத்தில் கிடைத்த ஒத்துழைப்புப் போன்று பிராந்திய சேவைகள் பணிப்பாளர் உட்பட நிர்வாக மட்டத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு மட்டக்களப்பில் கடமையாற்றிய எமக்குக் கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு [illegible] அதனை தீர்க்கவேண்டும் [illegible] நிர்வாக மட்டத்தில் காணமுடியவில்லை.

எமது முயற்சியால்ஏதாவது மருத்துவ உதவிகள் கிடைக்கும்போது மட்டும்சந்தோஷப்படுகிறார்கள்.

தாதிமார், கங்காணிமார் தரப்பில் கிடைத்த ஒத்துழைப்பால்தான் எம்மால் சிறந்த சேவையை இங்கு ஆற்ற முடிந்தது,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், எமக்கும் எமது சேவைக் காலத்தில் குறிப்பித்தக்க நட்புறவு ஏற்பட்டது. அவர்கள் எமது கருத்துக்களுக்கு மதிப்பளித்து [illegible] குறித்து பெருமைப்படுகிறேன், இப்படி அவர் கூறினார். (இ-ரி)

## நாணய மாற்று விகிதம்

05-06-1990

இலங்கை மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 229.55 | 230.51 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.30 | 4002.50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6694 21 | 6735 41 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2350.64 | 2380.44 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 693 39 | 708.85 |
| 100 | ஜப்பானிய யென் | 26.0699 | 26.4362 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க்கில் இலங்கை தமிழர் கிரிக்கெட் போட்டி

டென்மார்க், ஜூன் 7

டென்மார்க்கில் வாழும் இலங்கையர்களுக்காக டென்மார்க்கில் கிரிக்கெட்போட்டி ஒன்று நடத்தப்படுகிறது.

சங்கரப்பிள்ளை வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறும் இப்போட்டியை டென்மார்க்கிலுள்ள பரடேசியா டெனிஷ் கிரிக்கெட் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

இரண்டாவது வருடமாக நடைபெறும் இப்போட்டியில் கடந்த வருடம் பரடேசியா தமிழர் அணி சம்பியனாகி இருந்தது. (எ-மு)

# மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக ருஷ்டியை பிரி. முஸ்லிம்களிடம் ஒப்படைக்குக!

### ஈரான் ஆத்மீக தலைவர் அலிகாமேனி பிரதமர் தாட்சருக்கு கோரிக்கை

தெஹ்ரான் ஜூன் 7

சால்மான் ருஷ்டியின் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுமுகமாக, அவரை பிரிட்டனில் உள்ள முஸ்லிம்களிடம் ஒப்படைக்கும்படி ஈரானில் ஆத்மீகத் தலைவர் அலிகாமேனி பிரிட்டிஷ் அரசுக்கு நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதியதற்காக ஒரு வருடத்திற்கு முன்னர் மறைந்த ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனி சால்மன் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தார்.

இந்த நூல் இஸ்லாத்தை நிந்தனை செய்வதாகக் கூறியே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் எழுத்தாளரான ருஷ்டி தலை மறைவு வாழ்க்கை நடத்தி வருகின்றார்.

ருஷ்டியின் நூலைக் கண்டிக்காதது; அவர் மீது நடவடிக்கை எடுக்காதது ஆகிய காரணங்களை முன் வைத்து பிரிட்டனுடனான ராஜதந்திர உறவை ஈரான் தன்னிச்சையாகத் துண்டித்துக்கொண்டது.

பிரிட்டன் மன்னிப்புக் கோரினால் மீண்டும் ராஜரீக உறவைப் புதுப்பித்துக் கொள்ள ஈரான் கடந்த



ருஷ்டி

வாரம் விருப்பம் தெரிவித்தது.

இப்போது ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்ற அவரை பிரிட்டனில் உள்ள முஸ்லிம்களிடம் ஒப்படைக்கும்படி ஈரான் கோரியிருப்பது, மீண்டும் பிரிட்டனுடனான ராஜரீக உறவை வளர்த்துக் கொள்வதற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரானின் கோரிக்கையை பிரிட்டன் ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்துள்ளது. (எ)

★ காஷ்மீர் பிரச்சினை:

## யுத்த மேகம் கலையவில்லை; இந்திய அமைச்சர் பதில்!

கோலாலம்பூர் ஜூன் 7

யுத்த மேகம் கலையவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால் சொன்னார்.

கோலாலம்பூரில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "பாகிஸ்தான் தனது போர் விமானங்களில் அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடிய மாற்றங்களைச் செய்து வருகிறது. இந்த நிலையில் இந்தியா-பாகிஸ்தான் இடை நிலை யுத்த மேகம் கலைந்து விட்டது என்று எப்படி கூறமுடியும்? என்று கேட்டார். (எ)

## பனிப்போர் பற்றி கோர்பச்சேவ்

ஜூன் 07

பனிப்போர் "முடிந்து விட்டது என்று சோவியத் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்பச்சேவ் சொன்னார்.

சான்பிரான் ஸிஸ்கோ பல்கலைக்கழகத்தில் கோர்பச்சேவுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது அவர் பேசுகையில் இரு நாடுகளும் உறவை வளர்த்துக் கொள்ள திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றும் தெரிவித்தார். [எ]



## தேவை

கண்ணாடி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு இளைஞர்களும், பெண்களும் தேவை. சம்பளத்துடன் இதர சலுகைகளும் வழங்கப்படும்.

நேரில் வரவும்:

த பெனின்சுலா குறூப்,
மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை,
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

[சி-4706]

## தேவை

**உடைந்த வெள்ளை போத்தல் ஓடுகள் தேவை**

எமது தொழிற்சாலைக்கு நேரில் கொண்டு வந்து தருபவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 1 ரூபா 10 சதம் வீதம் வழங்கப்படும்.

எமது தொழிற்சாலைக்காக எவராவது தமது இடங்களிலேயே போத்தல் ஓடுகளை சேகரிக்கலாம். தகுதியுள்ளவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும். போத்தல் ஓடுகள் சேர்ந்தவுடன் எமக்கு அறிவித்தால் உடனடியாக வந்து ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா வீதம் பணம் செலுத்தி பெற்றுக் கொள்வோம்.

யாழ்ப்பாணத்துக்கு வெளிமாவட்டங்களில் உள்ளவர்களும் ஓடுகளை சேகரித்து எமக்கு அறிவித்தால் நாம் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோம்.

த பெனின்சுலா குறூப்,
மகேந்திரா கண்ணாடித் தொழிற்சாலை,
அரஸ்கோ கட்டடம்,
163, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பானம்.

[சி-4704]

## EXHIBITION

**Chundikuli Girls' College - Jaffna
Dr. E. M. Thilliampalam Institute
For Vocational Studies**

An exhibition of Iced Cakes, Bouquet and flower arrangements, Handicrafts, Macreme, Pot Paintings, Hair Styles and Garments will be on display on 6th, 7th and 8th June 1990 from 9 a. m. to 6 p. m.

PRINCIPAL.

[C/4638]

## SPECIAL ENGLISH COURSE

விசேட

## ஆங்கில மொழிப் போதனை

- ★ பேச- எழுத- வாசிக்க- கிரகிக்க
- ★ பாடசாலை விலகியோர், உயர் கல்வி மாணவர், ஆங்கில மொழியில் ஆர்வமுடையோர்க்காகிய கற்கை நெறி
- ★ 6 மாத, துரித, விரிவான போதனை
- ★ வாரநாள் வகுப்புகள்.

ஆரம்பம்: 08- 06- 1990 பி. ப. 3 மணி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

தொடர்பு:

நிர்வாகி
NEW SCIENCE ACADEMY
OPP. B. M. C. JAFFNA.

(சி/4712)



★ கனடா அரசியல்

## குயபெக் தனிநாடு ஆகுமா? சமரச முயற்சிகள் தீவிரம்!

ஒட்டாவா, ஜூன் 7

கனடா அரசியல் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்கி உள்ளது

பிரெஞ்சு மொழி பேசும் குயபெக் மாநிலத்துக்கு விசேட சலுகை அளிக்கும் 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கையை கனடாவின் ஏனைய பத்து மாகாண அரசுகளில் மூன்று ஏற்கமறுத்துவிட்டன.

அந்த உடன்படிக்கையை கனடாவின் சகல மாகாண அரசுகளும் ஏற்றுக் கொண்டால்தான் சட்டமாகும்.

இந்த உடன்படிக்கையைச் சட்டமாக்கும் கடைசித் திகதி இம்மாதம் 23 ஆம் திகதி ஆகும்.

ஆனால் மனிற்றோபா, நியூபுருன்ஸ்விக், நியூபவுண்ட்லாந்து ஆகிய மாகாண அரசுகள் 1987 உடன்படிக்கையை ஏற்கமுடியாது என்று அறிவித்துவிட்டன.

குயபெக் மாகாணம் கனடாவில் இருந்து பிரிந்து செல்வதைத் தடுப்பதற்காக 1987 உடன்படிக்கை செய்யப்பட்டது.

உடன்படிக்கை அமுலாக்கப்படாத பட்சத்தில் குயபெக் மாகாணம் பிரிந்து போகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் கனடாவின் பிரதமர் பிறையன் மல்றோனி அவசரப்பேச்சுக்களை மாகாண அரசுகளுடன் நடத்தி வருகிறார். (எ)

## கம்போடிய மாநாடு ஒத்திவைப்பு

கம்போடியாப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது சம்பந்தமாகநேற்று ஆரம்பமான சமாசமா நாடு, ஆரம்பமான இருபத்தைந்து நிமிடங்களில் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதான கெரில்லாக் குழுவான கெமரூச் தலைவர் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்ததே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. (எ)

## இஸ்ரவேலில் புதிய அரசாங்கம் அமைக்க ஷாமிருக்கு வாய்ப்பு

ஜெரூசலம் ஜூன் 7

இஸ்ரவேலின் காபந்து பிரதமரான திரு. யிட்ஷாக் ஷாமிர் அடுத்த வாரம் புதிய அரசு ஒன்றை அமைப்பார் என்று அறிவிக்கப்படுகிறது.

லிக்குவிட் கட்சித் தலைவரான ஷாமிர் தலைமையிலான கூட்டு அரசு, தொழிற்கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டதை அடுத்து நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி கண்டது.

அதன் பின்னர் திரு. ஷாமிர் காபந்து பிரதமராக இருந்து வருகிறார்.

இதனிடையில் --

புதியஅரசு ஒன்றை அமைக்கும்படி தொழிற்கட்சியை ஜனாதிபதி அழைத்தார்.

தொழிற்கட்சித் தலைவர் சைமன் பெரெஸ் புதிய அரசு ஒன்றை சிறுபான்மை இன மதவாதக் கட்சிகளின் ஆதரவுடன் அமைக்க எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

இப்போது மீண்டும் அரசு ஒன்றை அமைக்க காபந்து பிரதமர் அழைக்கப்பட்டிருக்றார். (எ)

## ரஷ்ய வெளியுறவு கொள்கையில் மேலும் பல மாற்றங்கள்!

மாஸ்கோ, ஜூன் 7

எதிர்வரும்5வருடங்களிலும் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் மேலும் பல பல சீர்திருத்தங்கள் ஏற்படக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பந்தோபஸ்துக் குறித்து கிரெம்ளின் எடுக்கும் நடவடிக்கைகள் நிதானமான போக்கு உடையதாகவும் ஸ்திரத்தன்மைக் கொண்டதாகவும் உள்ளன என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

கிரெம்ளினில் புதிய அரசியல் சிந்தனையின் பிரகாரம் பாரிய திங்கை விளைவிக்கக் கூடியஆயுதங்களை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாகவாழஉரிமை வழங்குவது என்பன புதிய அரசியல் சிந்தனையின் மற்றுமொரு அம்சமாகும்.

கோர்பசேவ் தலைமையிலான குழு வெளிநாட்டுக் கொள்கையில் மேற்கொள்ளும் சீர்திருத்தங்களை பெருவாரியான மக்கள் வரவேற்கின்றனர்.

வாஷிங்டன் நிர்வாகமும் தனது வெளிநாட்டுக் கொள்கையில் ஆக்கபூர்வமானமாற்றங்களைக்கொண்டுவருவதன் அவசியத்தை மாஸ்கோ தீர்மானங்கள் காட்டுவதாக உள்ளன. என்று மேற்குலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## இந்திய அரசு கவிழாது!

கொச்சி ஜூன் 7

"பிரதமர் வி. பி. சிங் தலைமையில் உள்ள மந்திரி சபை கவிழாது" என்று இ. கம்யூனிஸ்டு தலைவர் நம்பூதிரிபாட் கூறியுள்ளார்.

இ. கம்யூனிஸ்டு கட்சி பொதுச்செயலாளர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் கொச்சியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது இது பற்றி கூறியதாவது:

இப்போதுள்ள மத்திய அரசு முன்னைய இ. காங்கிரஸ் அரசின் தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

எனினும் சோசலிசம் மற்றும் பொருளாதார கொள்கைகளில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள் வரவேற்கும்படி இருக்கிறது.

காஷ்மீர் மற்றும் வடநாட்டில் தோன்றியுள்ள பிரச்சினை காரணமாக மத்திய அரசுக்கு ஆபத்து எதுவும் வராது.

தொடர்ந்து 5 ஆண்டுகள் அவர்கள் பதவியில் நீடிப்பார்கள்.

வி. பி. சிங் அரசு நிச்சயம் கவிழாது. இப்படி நம்பூதிரிபாட் சொன்னார். [எ]

## லைபீரிய நிலைமை

லைபீரியாவில் புரட்சிப் படைகள் நேற்று தலைநகரில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள ரப்பர் தோட்டம் ஒன்றைக் கைப்பற்றின (எ)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.

**A/L 90**

வினா - விடை

தமிழ் - குழந்தை

ஆரம்பம்: 09 - 06 - 1990 3 மணி

(சி-4680)

## பழைய பத்திரிகை விற்பனைக்கு

பழைய பத்திரிகை விற்பனைக்கு உண்டு. உங்கள் விலையைக் குறிப்பிட்டு 08 - 06 - 1990 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தெரிவுசெய்யப்படுபவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர்.

முகாமையாளர் (நிர்வாகம்),
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ்
பிறைவேட் லிமிட்டெட்,
[illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

யே. ம. சு. துணை

+

முதலாவது

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்

★ ஜெறோம் இறட்ணறாச் ★

[07-06-1990] வியாழக்கிழமை இன்று இரத்தின சிங்கம் தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜெறோம் இறட்ணறாச் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை வாழ்த்துவோர்: அப்பா, அம்மா அப்பம்மா, அப்பப்பா, கெனடி [தொட்டப்பா], ஜெயவதி [தொட்டம்மா]. மாமன்மார், மாமிமார், பெரியன்ரிமார், சின்னன்ரிமார், சித்தப்பாமார், டெசினியா அக்கா, அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தங்கைமார், மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் புனித சவேரியார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

புனித சவேரியார் கோவிலடி,
குளமங்கால், மல்லாகம்.

[3656]

## சாரதி தேவை

கம்பனி நிர்வாக இயக்குநருக்கு கார்ச் சாரதி ஒருவர் தேவை. சேவைப் பழுதில்லாத தகுதியும், நீடிய அனுபவமும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வாகனம் செலுத்துவதற்கான லைசென்ஸ் மற்றும் முன்னர் பணிபுரிந்த இடங்களில் இருந்து பெற்ற நற்சாட்சிப் பத்திரங்கள் என்பவற்றுடன் வேலை நாட்களில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

இல 15, இரண்டாவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் K. S. நடராஜா**
(ஓய்வு பெற்ற உள்ளூராட்சித் திணைக்கள லிகிதர்)

மலர்வு: 30 - 03 - 1934 உதிர்வு: 08 - 05 - 1990

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் ஆருயிர்த் தந்தையே! அயராது உழைத்து எம்மை எல்லாம் உயரவைத்த உத்தமரே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் இன்னும் எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மே 9 ஆம் திகதி நடைபெற்ற ஈமகைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஆறாத்துயரில் ஆழும்
பிள்ளைகள்: வசந்தன், மாலதி, ரேவதி, பாமதி
உறவினர்கள்.

சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

[3805]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேஜர் முரளி புதிர்ப் போட்டி:

# 2ஆம் சுற்றுப் போட்டிக்கு தெரிவான பாடசாலைவிவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 6 மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடத்திய யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டத்திலான புதிர்ப்போட்டிகளின் முதலாம் சுற்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பின்வரும் பாடசாலைகள் இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகின:-

**வலிகாமம்**

யாழ்ப்பாணக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், மருதனார்மடக் கோட்டம் ஆகியவற்றில் நடைபெற்ற போட்டிகளில்வேம்படிமகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, சன்மார்க்க மகாவித்தியாலயம், சுதிஜா மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

இளவாலை கொன்வென்ற், மல்லாகம்மகாவித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி, வீமன்காமம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி

**தென்மராட்சி**

உசன் ராமநாதன் மகா வித்தியாலயம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மாகாவித்தியாலயம் நாவற்குழி மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**தீவகம்**

மண்டைதீவு மகாவித்தியாலயம், சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம், கயலாம்பிகை வித்தியாலயம், டாக்டர். ஏ. தியாகராசா மகாவித்தியாலயம், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை, நயினாதீவு மகாவித்யாலயம், சைவப்பிரகாசவித்தியாலயம்

**வடமராட்சி**

விக்னேஸ்வராக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.

இரண்டாம்சுற்றுப்போட்டி இன்றுவியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

(இ-9)

## மாகாண சபை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தை சட்ட வரைஞர் திணைக்களமும், சட்டமா அதிபர் திணைக்களமும் இணைந்து தயாரித்திருப்பதாகவும் அவர் கூறினார்—

"விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதங்களை வைத்திருக்கும் சமயம் தேர்தல் நடத்தப்படுமா?" என்றொரு செய்தியாளர் அமைச்சரிடம் கேட்டார்.

பதில்: இந்த விஷயம் குறித்து நமது நிலை மிகவும் தெளிவானது.

ஆயுதங்களை அவர்கள் முதலில் கையளிக்க வேண்டும்.

மக்கள் சுதந்திரமாகத்தேர்தலில் வாக்களிப்பதற்கு இடமில்லையாயின் அதனால் எந்த விதப் பயனும் இல்லை- என்றார் அமைச்சர்.

இந்திய மீனவர்கள் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்படுவது ற்றிக்கேட்ட போது-

இலங்கை மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்கத்திலேயே விடுதலைப் புலிகள் இப்படிச் செயற்படுகிறார்கள். அதற்காக அவர்களுக்கு கடற்படை அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகக்கூறுவது தவறு.

இரு நாட்டு மீனவர்களும் கடல் எல்லைகளை மீறி மீன்பிடிப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இதனை அவ்வளவு பெரிய விடயமாக எடுக்கத் தேவையில்லை

இத்தகைய சம்பவங்கள் குறித்து இரு நாட்டு அரசுகளும் தங்களுக்குள் பேசி சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் - என்றார் அமைச்சர்.

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 16.00-18.00 | ரூ. 12.00-16.00 | ரூ. 18.00-20.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 7.50-9.50 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 18.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 13.00-14.00 | ரூ. 14.00-16.00 | ரூ. 18.00-20.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22.00 | ரூ. 21.00-22.00 | ரூ. 24.00-26.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 17.00-19.00 | ரூ. 19.00-20.00 | ரூ. 24.00-26.00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10.00 | ரூ. 10.00-14.00 | ரூ. 16.00-18.00 |
| பீன்ஸ் | ரூ. 18.00-20.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 24.00-26.00 |
| பூசணி | ரூ. 5.00-6.00 | ரூ. 5.00-7.00 | ரூ. 7.00-8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 18.00-20.00 | ரூ. 24.00-30.00 | ரூ. 26.00-28.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 40.00-45.00 | ரூ. 48.00-50.00 | ரூ. 53.00-55.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 30.00-35.00 | ரூ. 33.00-35.00 | ரூ. 48.00-50.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 30.00-32.00 | ரூ. 30.00-32.00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 16.00-18.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 18.00-20.00 |

## கம்பியூட்டர்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினர்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களுடன் யாழ். பல்கலைக்கழகம் கம்பியூட்டர் துறை இணைப்பு மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது (ஒ-3)

## மானிப்பாய் அந்தோனியார் ஆண்டுவிழா

கொக்குவில், ஜூன் 7 மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 17 ஆம் திகதி முடிவுறும்.

செவ்வாய்க்கிழமை மகளில் காலை 6 30 மணிக்கு திருப்பலியும் மாலை 5 மணிக்கு நவநாளும், திருப்பலியும் நடைபெறும்.

புனித அந்தோனியார் தினமான 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலி காலை 5. 45 மணிக்கும், திருவிழா திருப்பலி 7. 15 மணிக்கும் நடைபெற்று தொடர்ந்து திருச்சுருப பவனியும் இடம் பெறும் (ஒ-69)

## கசிப்பு வடித்தலை....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்க்கைச் செலவு தொடர்ந்து அதிகரித்தே வருகிறது. இப்போது என்ன காரணம் கூறப்போகிறார்கள்?

கஷ்டப்பட்டு கள்இறக்கும் தொழிலாளர்களுக்கு இன்று போதிய ஊதியம் இல்லை. அவர்கள் நிலை மிகவும் கஷ்டமானது.

கொள்ளைக்காரர்களையும் கொலைக்காரர்களையும், குற்றவாளிகளையும் பிடிக்க முடியாத பொலீஸார் இன்று கசிப்பு வடிப்பவர்களையும், கள்ளச்சாராயம் காய்ச்சுவோர்களையும் பிடித்துத் தொல்லைப்படுத்துகிறார்கள்.

அவர்களைப் பிடித்துத் தொல்லைப்படுத்துவதை விடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

நல்ல பொருள்களைக் கொண்டு சீரிய முறையில் கசிப்பு காய்ச்சினால் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். ஏற்றுமதியும் செய்யலாம். இதன் மூலம் அந்நிய செலாவணியையும் பெருமளவில் சம்பாதிக்கலாம்.

சீவல் தொழிலாளர்களுக்கும் உரிய வேதனம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். - இவ்வாறு திரு வாசுதேவ மேலும் கூறினார்.

[உ-2]

## அபிவிருத்தி - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், திணைக்களத் தலைவர்களும்கலந்து கொண்டனர்.

ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் 89 ஆம் ஆண்டுக்குரிய வேலைகளையும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் 90 ஆம் ஆண்டுக்குரிய வேலைகளையும் முடிக்க வேண்டும் என்றும் பிரஸ்தாப கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஒ-3)

# வைத்தியர்கள் தாம் வாழ்ந்த சூழலில் சேவையாற்ற வேண்டும்

## பேராசிரியர் சிவத்தம்பி உரை

யாழ்ப்பாணம், ஜூன் 7 'சமூகத்தின் உயர் இடத்தில் வைத்து மதிக்கப்படும் வைத்தியர்கள் எந்த சமூகத்தின் சூழ்நிலையில் திறமைகளைப் பெறுகிறார்களோ அந்த சமூகத்துக்காக சேவையாற்ற வேண்டியது அவசியம். அதுவே அவர்கள் சமூகத்துக்கும், தமக்கும் செய்யும் சேவையாக அமையும்'

இப்படிக் கூறினார் யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

யாழ். மருத்துவபீடத்தின் வருடாந்த வைத்திய வாரத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற சமயம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மருத்துவர்கள் சமுதாயத்தில் உயர்மட்டத்தில்வைத்து மதிக்கப்படுகிறார்கள். அவர்கள் சமூகத்தின் பண்பாடு, கலை, கலாசாரங்களில் ஈடுபடுவது பாராட்டப்பட வேண்டும்.

எம்சமயப் பண்பாட்டில் கடவுள் உயர்ந்த வைத்தியனாக கருதப்படுகிறார். இதனால் சிவபெருமானை வைத்தியநாதன் என்றும் அழைக்கிறோம்.

கடவுள் அந்தஸ்தில் உள்ள வைத்தியர்கள் சமூகத்தில் இருந்து உயர்வுபெற்று வெளி நாடுகளில் கடமையாற்ற முனைவது ஏற்கக் கூடியது ஒன்றல்ல. இந்த சமூகசூழலில் பெற்ற கல்வியை, திறமையை இந்த சமூகத்துக்கே சேவையாற்ற வேண்டியது அவசியம் இப்படி அவர் கூறினார்.

பதில் மருத்துவபீடாதிபதி பேராசிரியர் சரவணபவானந்தன் பேசுகையில், மருத்துவ பீடம் முன்பு கட்டட வசதிகள் இல்லாதபோது போதிய விரிவுரையாளர்கள் இருந்தனர். இன்று போதிய உபகரணங்கள், கட்டடங்கள் இருந்தபோதும் போதிய விரிவுரையாளர்கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது என்றார்.

மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ-3-10)

## தென்பகுதி- --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

கைது செய்யப்பட்டவர்களில் பத்து பேர் பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடமிருந்து "கொமாண்டோ" தாக்குதல்கள் பற்றிய வீடியோ பட கசெட்டுகள், இராணுவச் சீருடைகள், பெருமளவு ஆயுதங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்றவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-2)

## சொய்ஸா- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

டாக்டர் மனோராணி சரவணமுத்து ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம குறித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது குறித்து பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்தினாவிடம் நேற்றுச் செய்தியாளர்கள் கேள்வி தொடுத்தனர்.

அதற்கு அவர் நேரடியான பதில் கொடுக்கவில்லை.

(அ-எ)

## உள்ளூராட்சி- - -

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் மின்சக்தி செயலாளருடனும் துணைஅமைச்சரின் செயலாளருடனும் பேச்சு நடத்தினேன்.

கடந்தகால நிலைமைகளை எடுத்து விளக்கி இந்த நிலுவையை பதிவழிக்கும்படி கோரினேன். அதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

மாகாணசபை மூலமாக புனர்வாழ்வு அமைச்சிடம் இந்த விடயம் குறித்து பேச்சு நடத்த இருக்கிறேன்.

இதேநேரம் இப்போதும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துவருகிறது. இப்படிச் செய்பவர்கள் இதனால் ஏற்படப்போகும் பாதிப்புக் குறித்து யோசிக்கவேண்டும். இந்தநிலை தொடர்ந்தால் பெரும் பாதிப்பை மக்கள் தான் அனுவிக்க வேண்டி வரும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-3


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது. சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480



இப்பொழுது! ஒரே தடவையில் முழுப் பணத்தையும் செலுத்தி பஜாஜ் வாகனத்தை உடனடியாகவே பெறலாம்.

**பஜாஜ் பயணம் கோடி பெறும்**

JWT 8P 20960 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English

ஆங்கிலம் பே . . . பம். ஆனா . . . பச வேண்டும் என்ற விருப் என்ற . . . ல தவறாகப் பேசிவிடுவோம் பிரச்சி தயக்கம். இதுதானே உங்கள் . . . னை. உளவியல் ரீதியில் 90 நாட் . . .ல் ஆங்கிலம் பேசும் பயிற்சி.

விபரங்கட்கு:

BRIGHT TRAINING CENTRE

P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

07 - 06 - 1990 வியாழக்கிழமை


Method of Book-keeping

கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும். ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.

விபரங்கட்கு:-

BRIGHT TRAINING CENTRE

P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெற்ற ''மருத்துவ வாரம்'' (மெடிக்கோஸ் வீக்) கொண்டாட்டத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பதில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே. சரவணபவானந்தன்பிரதம விருந்தினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி உரை நிகழ்த்துவதையும், நிகழ்ச்சிக்குச் சமுகமளித்திருந்த வைத்தியர்கள், வைத்திய மாணவர்கள் மற்றும் பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (அ.10)

(செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## யுத்த நிறுத்தம் - பேச்சுவார்த்தை விடுதலையைப் பெற்றுத் தரா

### சிவகுமாரன் நினைவுக் கூட்டத்தில் உரை

உரும்பராய், ஜூன் 7

'யுத்த நிறுத்தங்களோ பேச்சுவார்த்தைகளோ எமது தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை. இனி மேல் தான் நாம் வீறுகொண்டு போராட வேண்டிய காலகட்டமாகும்'.

உரும்பராய் தியாகி பொன் சிவகுமாரனின் நினைவுதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

உரும்பராய்ச் சந்தியில் பொன் சிவகுமாரன் சிலையருகே நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:

'அண்ணன் சிவகுமாரன் சிங்கள ஏகாதிபத்திய அரசுக்கெதிராகப் போராடியகாலத்தில் நான் சிறுவனாக இருந்தேன். அவருடைய நடபடிக்கைகள் பல தோல்வியைத் தழுவிக்கொண்டபோதிலும் அவர் பெற்ற அனுபவங்களே இன்று எமது இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமைந்தன. அவர் இறந்தபொழுது தமிழீழம் முழுவதுமே மக்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். அவருக்காகக் கண்ணீர் சிந்தினர். அவர்காட்டிய பாதையில் இன்று பல்லாயிரம்இளைஞர்கள் தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழ்மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வென்றெடுக்கும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இப்படி அவர் கூறினார்.

இயக்க உறுப்பினர்கள் பலரும் உரையாற்றினர். ஆரம்பத்தில் தியாகி சிவகுமாரனுக்குமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட தியாகி சிவகுமாரன் நினைவாலயமும், சிலையும் திறந்துவைக்கப்பட்டன. இதே இடத்தில் பல வருடங்களுக்கு முன்பு பொதுமக்களால் அமைக்கப்பட்டு பின்பு இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்ட தியாகி சிவகுமாரனின் சிலையும் அரைகுறை நிலையில் அப்படியே உள்ளது. [இ-ரி]

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் குளிரூட்டல் பயிற்சி நெறியில் 89 ஆம் ஆண்டு சித்தி அடைந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

கொத்தணி அதிபர் திரு. என். இராஜரத்தினம் தலைமையில் நடக்கும் இவ் வைபவத்தில் குளிர்சாதன தொழில் நுட்பவியலாளர் திரு.ப. செய்வேந்திரம் பிரதம விருந்தினராகவும் யாழ் கல்வித்திணைக்கள தொழினுட்பக் கல்வி அதிகாரி திரு. ச சுப்பிரமணியம், இளைப்பாறிய கொத்தணி அதிபர் திரு. வ. பாலசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், முறைசாராக் கல்விப்பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர்களான திரு எஸ். சிதம்பரநாதன், திரு. பாலகிருஷ்ணன், முறைசாராக் கல்விப் போதனாசிரியர் திரு. குமாரசமி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

### டெங்குக்கு 16 பேர் பலி

கொழும்பு, ஜூன் 7

கொழும்புப் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்தது.

## செய்திச் சாரம்

### கும்பளாவளையில் சேமிப்பு வங்கி கரும பீடம்

கொக்குவில், ஜூன் 7

தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை நடமாடும் வங்கி சேவைத் திட்டத்தின் கீழ் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் ஒரு தற்காலிக கரும பீடம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு திறக்கப்பட்டுள்ள இக் கருமபீடம் தினமும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை செயற்பட்டு வருகிறது.

நிலையான வைப்புக்கணக்கு சிறுவர் சேமிப்புக்கணக்கு ஆகியவற்றை இக் கரும பீடத்தில் ஆரம்பிக்கலாம் என சுன்னாகம் வங்கிக்கிளை முகாமையாளர் திரு. சி. சிவராஜா தெரிவித்துள்ளார். (ஒ-69)

### பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7

மாங்குளம், வன்னி விளாங்குளம்ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். அன்று அன்னதானமும் வழங்கப்படும்.

பக்தர்களின் வசதியை முன்னிட்டு விஷேட பஸ் சேவைகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (ஒ)

### வாய்க்கு மேல் அவயவம் இல்லாத சிசு!

யாழ்ப்பாணம், ஜூன் 7

வாய்க்கு மேல் அவயவங்கள் இல்லாத குழந்தைஒன்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிருடன் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் பிறந்த இந்தக் குழந்தை பரிசோதனைக்காக யாழ். மருத்துவ பீடத்துக்கு வழங்கப்பட இருக்கிறது.

குழந்தை இன்னும் உயிருடன் இருக்கிறது. ஆனால் இதனை உயிர் பிழைக்க வைக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

### சுவீடன் 42 கோடி ரூபா உதவி நிதி

இலங்கையில் பல அபிவிருத்தித் திட்டங்களை அடுத்த ஆண்டில் மேற்கொள்ளுதவற்காக சுவீடிஷ் அரசாங்கம் 42 கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

இது சம்பந்தமான உடன்பாடு நேற்று கொழும்பில் இரண்டு அரசுகளாலும் கைச்சாத்திடப்பட்டது. (. . .)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திவுப் பகுதியில் சேவையில் ஈடுபடும்

## படகுகள் பரிசோதிக்கப்பட்டு இன்று தகைமைப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

இன்று வியாழக்கிழமை குறிகாட்டுவான்இறங்குதுறையில் படகுகள் பரிசோதிக்கப்பட்டு தகைமைப் பத்திரங்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியில் சேவையில் ஈடுபடும் பிரயாணிகள் படகுகள் மற்றும் பொருள்களை ஏற்றி இறக்கும் படகுகள் அனைத்தும் இந்தத் தகைமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு 115 தீயணைப்புக் கருவிகள்

யாழ் - பல்கலைக்கழகத்துக்கு நான்கு லட்சம் ரூபா பெறுமதியான 115 தீயணைப்புக் கருவிகள் வந்து சேர்ந்துள்ளன.

யாழ்- பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் இவை பொருத்தப்படவுள்ளன.

இந்தக் கருவிகளைப் பொருத்துதல், மற்றும்செயற்பாடுகள் குறித்து யாழ் மாநகர சபை தீயணைக்கும் படை அதிகாரி நாளை வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக ஊழியர்களுக்கு விளக்கமளிப்பார்.

மேலும் 115 கருவிகள் விரைவில் வரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-10)

உள்ளூராட்சி மன்ற

## அபிவிருத்தி வேலைகள் யாவும் இரு மாதங்களில் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இருமாதங்களுக்குள் அபிவிருத்தி வேலைகளைப் பூர்த்தி செய்ய யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நயினாதீவில் மலசல கூடம் அமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நயினாதீவில் பொதுக்கிணறு அமைக்க ஒரு லட்சம் ரூபாவும், நெடுந்தீவில் பொதுக் கிணறு அமைக்க ஒரு லட்சம் ரூபாவும், பாலர் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்ய ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாவும், பலாலி வீதி அமைப்புக்கு 4 லட்சத்து 27 ஆயிரம் ரூபாவும், வீமன்காமம் செஞ்சிலுவைச் சங்க குடியேற்றத் திட்டத்துக்கு மின்சாரம் வழங்க 52 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும் வேலைகள் யாவும் இரண்டு மாதங்களில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## மன்னார் மாவட்டத்தில் தும்புத் தொழிற்சாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

மன்னார் மாவட்டத்தில் ஏழு லட்சம் ரூபா செலவில் இரண்டு பனந்தும்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

பனந்தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இயந்திர வசதியுடன் தலைமன்னார், கிறித்தோப்பு ஆகிய பகுதிகளில் இந்த தொழிற்சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன.

கட்டட வேலைகள் தற்சமயம் நடைபெறுகின்றன. (ஒ-3)

வடமராட்சியில் சேதமுற்ற

## உள்ளூராட்சித் திணைக்கள கட்டடங்கள்திருத்தப்படுகின்றன

வடமராட்சி ''ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின் போது முற்றாக சேதமாக்கப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களக் கட்டடங்கள் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வல்வெட்டித்துறை நவீன சந்தை, மீன் சந்தை, பொலிகண்டி பொது நூலகம் ஆகிய கட்டடங்களைப் புனரமைக்க 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது:

பருத்தித்துறை பகுதியிலும் கட்டடங்கள், வீதிகளைப் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

வடமராட்சியில் உள்ள சகல வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி. ஆறுமுகம் தெய்வானை

காலமானார்

இவர் மாதகல் மேற்கைச் சேர்ந்தவரும், இராமு ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி சிதம்பரம் அவர்களின் சகோதரியும், நாகம்மா, பொன்னம்பலம் [கணபதி களஞ்சியம்-பண்டத்தரிப்பு], செல்வராஜா [முருகன் ஸ்ரோர்ஸ் மீசாலை], புனிதராணி, அன்னலட்சுமி, ஆனந்தராசா, மோகனராசா, [கந்தன் ஸ்ரோர்ஸ் பண்டத்தரிப்பு], கலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் தாயாரும், நடராஜா, விமலாதேவி, துரைராசா [சுதாதாகம் தணியகம்-வவுனியா] ஞானகுரு, சந்திரசேகரம் [கனடா], புனிதவதிதேவி, ஈஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [7-6-90] பி. ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

ஆ. பொன்னம்பலம்.

[13413]

எமது இன்றைய புதிய வெளியீடு

ரமேஸ் - சார்லி - ரமா நடித்த

பாரதிராஜாவின்

★ என் உயிர்த் தோழன் ★

(ஒறிஜினல்)

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,

ஐந்து சந்தி, யாழ்ப்பாணம், [13412]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்துசாமிப்பிள்ளை தையலாம்பாள்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி முத்துசாமிப்பிள்ளை தையலாம்பாள் 6-6-90 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற ஸ்ரீமான் முத்துசாமிப்பிள்ளை (முடிக்குரிய வழக்கறிஞர்) அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற இராமநாதன் [R. M. P.] மங்கையர்க்கரசி [கனடா], காலஞ்சென்ற நகுலேஸ்வரி, யோகநாதன் [கனடா], சரஸ்வதிதேவி, மகேஸ்வரி [சோதி, கனடா] இராஜநாதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அருள்ஜோதி, காலஞ்சென்ற நவரட்ணம் [நில அளவையாளர்], காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராஜமலர் [கனடா], Dr. சந்திரசேகரன் [கனடா], இரமேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வகுமார் (கனடா), ஞான தனுஷியா, சசிரேகா (அமெரிக்கா), கிரிதரன் [கனடா], பாலமுரளி [கனடா], மைதிலி [லண்டன்], தேவகி [யாழ். மருத்துவ பீட மாணவி], சாந்தி [கனடா], பிரேமா [கனடா], மீனாகுமாரி [கனடா], காஞ்சனா [கனடா], வத்சலா [கனடா], கணநாதன் [கனடா], மனோகரன் [கனடா], கல்யாணி [கனடா], ஷாமினி [கனடா], ரமணன் (கனடா), ராஷ்மி [கனடா], சுமதி (கனடா), கைலாசநாதன் [அமெரிக்கா], சந்திரசேகரன் [கனடா], நகுலன் [கனடா], ரவீந்திரன் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், கனடாவில் வசிக்கும் விஜய், சஞ்சய், கேதர், ஸ்ரீபன், சேஷிணி ஆகியோரின் பூட்டியுமாவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-6-90 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மு. சரஸ்வதிதேவி
389, K. K. S, வீதி,
யாழ்ப்பாணம்.

[13411]

### மாலதி ஜெயரத்தினம்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திரு செனகரத்தினம் ஜெயரத்தினத்தின் அருமை மனைவி மாலதி 5 - 6 - 90 இல் சிவபதம் அடைந்தார்.

இவர் லக்ஷ்மணனின் அன்புத்தாயாரும், பத்மநாதன், லீலாவதி தம்பதிகளின் மூத்த புதல்வியும், கணேந்திரன், பத்மினி, ஜெயந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின்ஈமக்கிரியைகள் 7 - 6 - 90 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் உரும்பிராய் இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

கணவன்

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய்.

(13349)

### சின்னையாபிள்ளை முத்துக்குமாரசாமி

கொழும்புக்கோட்டை சின்னையாபிள்ளை அன்ட் சன்ஸ் உரிமையாளர் நா. சி. முத்துக்குமாரசாமி அவர்கள் கொழும்பில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையாபிள்ளை சொர்ணம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கமலம் (O.A. அபிவிருத்திச்சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், கௌரி, ஆனந்தி, பகீதரன், உமா, துளசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமாரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் இரத்தினவடிவேல், நகுலேஸ்வரி, செல்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாம்பிகை, கமலாவதி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தியாகராசா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), சண்முலிங்கம் (பொறியியலாளர், கொழும்பு மாநகர சபை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை 69, ஈச்சமொட்டை வீதி, சுண்டிக்குழியில் (07 - 06 - 1990) இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பகீதரன்.

69, ஈச்சமொட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(13410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org